Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MAY 18, 2022

புதன்கிழமை மே 18, 2022 | ஒளி: 07 கதிர்: 308 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# அத்தியாவசிய சேவைக்கு மட்டும் அழையுங்கள்

அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் அரச ஊழியர்களை அழைக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ் ருவன்சந்திர பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட இதுவரையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து பரிசீலனை செய்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதும், இந்தக் கோரிக்கைக்கு பொது நிர்வாகம் மற்றும் உள்துறை அமைச்சு இதுவரை பதில் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மே.18க்கு பிரமாண்ட ஏற்பாடு

சண்முகம் தவசீலன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில், நினைவேந்தல் நிகழ்வுக்கான பிரமாண்ட ஏற்பாடுகள் சிறப்புற இடம்பெற்று வருகின்ற நிலையில், அனைவரையும் அச்சமின்றி நினைவேந்தலில் கலந்துகொள்ளுமாறு வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய காலகட்டத்தில், அவர்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இன்று (18) உணர்வெழுச்சியுடன் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில், வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான அருட்பணி லியோ அடிகளார் உள்ளிட்ட பொதுமக்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அகவணக்கம் செலுத்தி நினைவேந்தல் ஏற்பாட்டு வேலைகளையும் சிரமதான பணிகளையும் முன்னெடுத்துள்ளனர். திங்கட்கிழமை (16) காலை முதல் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்கு வருகைதந்த அவர்களால் குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்றும் ஏற்பாட்டு பணிகள் இடம்பெற்றன.

தொடர்ச்சி P2



தமிழர்களிடம் இருந்து

# முகவர்களை தேடாதீர்கள்

## இனவழிப்புக்கு இன்றைய பிரதமரே அத்திவாரமிட்டார்

பா.நிரோஸ்

புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மானை பிரித்தெடுத்து, புலிகளை பலவீனப்படுத்திய புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே, தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு அத்திவாரமிட்டார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தமிழீழ விடுதலைப் புலிகளின்

# மீள்தாக்குதல் உண்மையல்ல

## எவ்வாறாயினும் இதுபோன்ற விடயங்களைக் குறைத்து மதிப்பிட்டு நடந்துக்கொள்ளக்கூடாது. கவனமாக செயற்பட வேண்டும்

பா.நிரோஸ்



முன்னர் பயங்கரவாதிகளை தடுத்து வைத்திருந்த தீவுகளில் இன்று அரசாங்கத்தின் தலைவர்கள் ஒளிந்துகொண்டுள்ளனர். மக்களுக்காக அர்ப்பணிப்புடனும் அன்புடனும் சேவை செய்திருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது என சபையில் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, புலிகள் அமைப்பினர் மீள் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக கூறப்படுவது பொய்யான ஒன்றெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பிரதமரின் வெட்கமற்ற செயல்

## சபையில் சீறிப்பாய்ந்தார் சுமந்திரன்

பா.நிரோஷ்



எதிர்க்கட்சியில் இருந்தபோது, ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்த ரணில், பிரதமராக பதவியேற்றவுடன் கொள்கையை மாற்றியுள்ளார். பிரதமரின் நிலைப்பாட்டை எண்ணி வெட்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார். ஜனாதிபதியை வீட்டுக்கு போகுமாறு மக்கள் கூறுகையில் அது தொடர்பான கலந்துரையாடல்களை பாராளுமன்றத்தில் முன்னெடுப்பது அவசியமாகும். இதன்படி அதற்கு தடைபோடாது அதனை முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று, பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளை நிறுத்தி ஜனாதிபதி தொடர்பான பிரேரணையை

தொடர்ச்சி P2

ஏப்ரல் தாக்குதல்;

# 55 பேருக்கு 30 வரை விளக்கமறியல்

கனகராசா சரவணன்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக, காத்தான்குடியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 55 பேரையும், எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில்

தொடர்ச்சி P2

# எந்தப் பக்கமென எனக்கே தெரியாது



## ஜனாதிபதிக்கு எதிராகப் பேசிய குமார் வெல்கம மீதும் தாக்குதல்

பா.நிரோஸ்

எதிர்க்கட்சியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வேண்டுமென தன்னிடம் கோரிக்கை விடுத்திருந்ததாக சபையில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூச்சல் குழப்பத்தில் ஈடுபடும் பாராளுமன்றக் கலாசாரம் நீடித்தால், அடுத்த வாரம் பாராளுமன்றமும் இல்லாதுபோகுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 92 ஒக். பெற்றோல் விநியோகம் மட்டு

## 2,3 நாள்களில் பிரச்சினை தீரும் என்கிறார் காஞ்சன

நாட்டில் 92 ஒக்டேன் பெற்றோல் விநியோகத்தில் மிகவும் கட்டுப்பாடான நிலை காணப்படுவதாக நேற்றையதினம் (17) ஒப்புக்கொண்ட எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குள் இந்த நிலைமையில் இருந்து மீளமுடியும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (17) கருத்துத் தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோல் தேவைக்கேற்ப அமைச்சால் தொடர்ந்தும் வழங்க முடியும் என்றும் ஆனால், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளுக்காக 92 ஒக்டேன் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜோன்ஸ்டன் உட்பட 22 பேரையும் கைது செய்யுமாறு சீ.ஐ.டிக்கு பணிப்பு

## 22 பேரில் இருவர் நேற்றைய தினம் கைது

சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, சஞ்சீவ எதிரிமான்ன, மிலன் ஜயதிலக உள்ளிட்ட 22 பேரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு (சி.ஐ.டி) நேற்று (17) பணிப்புரை விடுத்தார்.

தொடர்ச்சி P2



# ரணிலை முழுமையாக ஆதரிப்போம்

## எனக்கு கிடைக்கும் அமைச்சு அனைவருக்குமானது

பா.நிரோஸ்

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முழு ஒத்துழைப்பையும் வழங்குமென சபையில் தெரிவித்த இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், இடைக்கால அரசாங்கத்தில் தான்

தொடர்ச்சி P2

# ரணிலின் தோல்வி ஆரம்பம்

பா.நிரோஸ்



பிரதி சபாநாயகராக பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்கிற புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை, அவரை ஆட்சிக்கு கொண்டுவந்த ஆளுந்தரப்பினரே தோற்கடித்துள்ளதாகவும், பிரதமர் ரணில், ராஜபக்ஷர்களின் கைபொம்மையாக மாறியுள்ளார் எனவும் எனவே ரணில் விக்கிரமசிங்கவின்

தொடர்ச்சி P2

மே 9 வன்முறை விவகாரம்:

# அப்பாவிகளை கைது செய்யாதீர்கள்



மே மாதம் 9ஆம் திகதி பதிவாகிய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், அப்பாவிப் பொதுமக்களை கைது செய்வது வீண் எனத் தெரிவித்த முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் புபுது ஜாகொட, வன்முறையை திட்டமிட்டு தூண்டியவர்களையே கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுளளார்.

ராஜபக்ஷவுக்கு 109 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவிற்கு 78 வாக்குகளும் கிடைத்தன.





தொடர்ச்சி P2

மே 9 வன்முறை விவகாரம்:

# 664 பேர் கைது

## 7 எம்.பிக்களை விசாரிக்க சபாநாயகரிடம் கோரிக்கை

மே மாதம் 9ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னரான நாள்களில், நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 258 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, நேற்று (17) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சுமந்திரனின் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது

பா.நிரோஷ்

ஜனாதிபதியின் மீது அதிருப்தியைத் தெரிவிக்கும் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்கு நிலையியல் கட்டளையை இடைநிறுத்திவைப்பது தொடர்பாக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற

தொடர்ச்சி P2

ஊழலை விசாரிக்காமல்

# எரிபொருள், மின்கட்டணத்தை அதிகரிக்க முயற்சி

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்களை விசாரிப்பதற்குப் பதிலாக, எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் எடுத்துரைத்திருந்ததாகவும் ஊழல் சம்பவங்கள் காரணமாக அரச நிறுவனங்களில் ஏற்படும் நட்டங்களுக்கு நுகர்வோர் பொறுப்பல்ல எனவும் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிவற்றால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை சந்திக்கும் அதேவேளை, இலங்கை மின்சார சபை, ஓர் அலகு மின்சாரத்துக்கு 30 ரூபாய் நட்டம் ஏற்படுவதாக பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மே.18க்கு பிரமாண்ட ஏற்பாடு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்குள் இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமர், நினைவேந்தல் செய்ய எந்த தடையும் இல்லை என தெரிவித்தாலும் நினைவேந்தல் வளாகத்துக்குள் இராணுவ காவலரண் அமைக்கப்பட்டமைக்கு உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு நினைவேந்தல் வளாகத்தை சூழ பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டுள்ளதுடன் நினைவேந்தல் வளாகத்துக்குள் வருபவர்களை பொலிஸார் பதிவு செய்து அச்சுறுத்தல் விடுத்தும் வருவதாக உறவுகள் குற்றம் சுமத்துகின்றனர்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு நீதிகோரி அம்பாறையில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் முள்ளிவாய்க்கால் நோக்கி போரணிகள் ஆரம்பமாகி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் நோக்கி வந்துகொண்டிருக்கின்றன.

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் ஒன்று கூடிய மக்கள் பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்ததுடன், உணவுத் தேவைக்காக பல்வேறு இன்னல்களை சந்தித்தனர்.

அதன் காரணத்தினால், முள்ளிவாய்க்காலில் அவர்களது பசி போக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நடவடிக்கையும் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# முகவர்களை தேடாதீர்கள்

தமிழர்களிடம் இருந்து தலைவர்களை தேடுங்கள், மாறாக முகவர்களை தேடவேண்டாம் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று(17) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே விமல் வீரவன்ச இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளராகவும், சரத் பொன்சேகா இராணுவத் தளபதியுமாக இருந்து தமிழ் மக்கள் மீது இனவழிப்பு யுத்தத்தை செய்தார். ஆயுதங்கள் மௌனித்துவிட்டதாக புலிகள் அறிவித்தன் பின்னரும் கூட இசைப்பிரியா போன்ற பலர் இராணுவ தளபதிகளுக்கு முன்பாக கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் எனவும் தெரிவித்தார்.

இந்த இனப்படுகொலைக்கு பிரதமர் ரணிலே அப்போது வழியேற்படுத்திக்கொண்டார். இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண்பதற்கான சமாதான உடன்படிக்கையை ரணிலே செய்தார். இதன்போது புலிகள் அமைப்பில் இருந்து கருணா அம்மானை பிரித்தெடுத்து புலிகளை ரணில் பலவீனப்படுத்தினார். அத்தோடு, புலிகளால் பலவீனப்பட்டிருந்த இராணுவத்தை மீள கட்டியெழுப்ப ரணிலே அத்திபாரமிட்டார் எனவும் தெரிவித்தார்.

# மீள் தாக்குதல் உண்மையல்ல

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

9ஆம் திகதி அலரி மாளிகையில் இருந்தே வன்முறை சம்பவங்கள் ஆரம்பமாகின. இதற்கு முன்னாள் பிரதமர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதால் இந்த வன்முறைச் சம்பவங்களை வேறு நபர்கள் மீது சுமத்த ஆளுந்தரப்பினர் முயல்கிறார்கள். மக்களின் கோபங்களே வான்முறைக்கு காரணம். மக்களை நீங்களே கோபப்படுத்தினீர்கள்.

இதேவேளை தற்போது புலிகள் அமைப்பினர் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக கூறுகிறார்கள். அது உண்மையில். எவ்வாறாயினும் இதுபோன்ற விடயங்களைக் குறைத்து மதிப்பிட்டு நடந்துக்கொள்ளக்கூடாது. கவனமாக செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் தங்களதுக் கடமைகளை சுயாதீனமாக மேற்கொள்ள வேண்டும். குற்றங்களை செய்த அரசியல் வாதிகளைப் பாதுகாக்க சட்டத்துக்கு புறம்பாக செயற்படக்கூடாது.

முன்னர் பயங்கரவாதிகளை தடுத்து வைத்திருந்த தீவுகளில் இன்று அரசாங்கத்தின் தலைவர்கள் ஒளிந்துகொண்டுள்ளனர் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தால் இவ்வாறு ஓடி ஒழிந்துக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. எதிர்க்கட்சியிலிருந்து பிரதமர் ஆசனத்தில் அமர்வது, பிரதமர் ஆசனத்திலிருந்து ஜனாதிபதியின் ஆசனத்தில் அமரும் அரசியல் கலாசாரமே ரணிலுக்கும் தெரியும். 45 வருடங்களுக்குப் பின்னர் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென ரணிலுக்கு தெரிந்துள்ளது. அரசியலுக்கு வந்த 5 வருடங்களிலேயே நான் இதனைத் தெரிந்துக்கொண்டேன் எனவும் தெரிவித்தார்.



# பிரதமரின் வெட்கமற்ற செயல்

விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

சபையின் அலுவல்கள் தொடர்பான விடயத்தில் இன்றைய நாள் அமர்வு தினத்தின் நிலையியற் கட்டளைப்படி பிரேரணையாக இந்த பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அது தேசிய பாதுகாப்பு தொடர்பான பிரேரணையாகும். ஜனாதிபதியை பதவி விலகிப் போகுமாறு மக்கள் கோருகின்றனர். மக்கள் என்ன கூறுகின்றனர் என்பதனை அறிந்துகொள்ள சிறந்த சந்தர்ப்பமாகும். இதுவே நாட்டில் இருக்கும் கலந்துரையாடலாக உள்ளது.

தற்போதுள்ள பிரதமர் எதிர்க்கட்சியில் இருக்கும் போது, ஜனாதிபதி தொடர்பான பிரேரணையை வாக்களிப்பதாக கூறினார். இதற்கு சாதகமாக வாக்களிப்பதாகவும் ஏப்ரல் மாதத்தில் கூறியிருந்தார். ஆனால் இப்போது மாறியுள்ளார். பிரதமராக பதவியேற்று கொள்கையை மாற்றியுள்ளார். அவ்வாறான பிரதமரே இருக்கின்றார். பிரதமரின் நிலைப்பாட்டை எண்ணி வெட்கப்பட வேண்டும். ராஜபக்ஷர்களுக்காக ஒரு பணியை எடுத்துக்கொண்டு அதனை நிறைவேற்றி வருகின்றார் என்றார்.

# 92 ஒக். பெற்றோல் விநியோகம் மட்டு

எனினும், இன்றையதினம் (18) பெற்றோல் தொகுதியை இறக்குமதி செய்யவுள்ள கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதால், மூன்று நாட்களுக்குப் பின்னர் பெற்றொல் தட்டுப்பாடு தீர்க்கப்படும் என்றார்.

தங்களிடம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேமிப்பகத்தில் போதுமான டீசல் கையிரப்பு உள்ளதாகவும் இது முழு நாட்டுக்கும் போதுமானது என்றும் வரிசை ஒழிப்பதற்கான நடைமுறையை தொடர எதிர்பார்க்கிறோம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# 55 பேருக்கு 30 வரை

நீதவான் ரி.தியதகேஸ்வரன், நேற்று (17) உத்தரவிட்டார்

சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை, நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்றும் சந்தேகத்தின் பேரில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேர் காத்தான்குடியில் கைது செய்யப்பட்டனர்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் ஆகியோரது வழக்குகள், உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். 7 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. ஏனைய 55 பேர், பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, பதுளை மற்றும் திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டனர்.

# எந்தப்பக்கமென எனக்கே தெரியாது

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றும் போதே அவர் இதனை கூறியிருந்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசப்படுகிறது, இது தொடர்பில் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென நான் பொலிஸ்மா அதிபரிடம் வினவியபோது, பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரைக் கைது செய்ய வேண்டுமென சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸ்மா அதிபர் கூறினார் என்றார்.

மேலும் இந்த விசாரணைகள் தொடர்பில் மூன்று நாட்களுக்கு ஒருமுறையோ அல்லது இரு நாட்களுக்கு ஒருமுறையோ அறிக்கையிட வேண்டுமென பொலிஸ்மா அதிபருக்கு தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் கூறினார். பாராளுமன்றத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு எதிராகப் பேசிவந்த குமார் வெல்கம எம்.பி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றார்.

# ரணிலின் தோல்வி ஆரம்பம்

தோல்விகள் இன்று முதல் ஆரம்பிக்கின்றது எனவும், அரசாங்கத்தின் தோல்விகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றும்போதே அவர் இதனைகூறினார். அவர் மேலும் கூறுகையில்,

சபாநாயாகர், பிரதி சபாநாயகர் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கு பாராளுமன்றத்தில் இதுவரையில் பெண்கள் தெரிவு செய்யப்படவில்லை. உலகின் முதற் பெண் பிரதமராக, நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிக்கும் பெண்ணை தெரிவு செய்த நாட்டில், பாராளுமன்றத்துக்குள் பெண்களை உயர்பதவிகளுக்கு நியமிக்க முடியாதென்பனை ஆளுந்தரப்பினர் உலகுக்கு காட்டியுள்ளனர் எனவும் தெரிவித்தார்

போராட்டக்காரர்கள், நாட்டிலுள்ள புத்திஜீவிகள் சிலரும் பிரதி சபாநாயகர் பதவிக்கு நான் பொறுத்தமானவர் என்றே கூறினார்கள். புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பெண் ஒருவரே பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட வேண்டும் என்றார். எனினும் புதிய பிரதமரின் முதலாவது கோரிக்கையை ஆளுந்தரப்பினர் தோற்கடித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# ஜோன்ஸ்டன் உட்பட 22 பேரையும் கைது செய்யுமாறு சீ.ஐ.டிக்கு பணிப்பு

காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம மற்றும் அலரிமாளிகை எதிரில் அமைக்கப்பட்டிருந்த மைனா கோ கம ஆகிய போராட்டத்தளங்களில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது கடந்த மே 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தே அவர்களை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# அப்பாவிகளை...

மாநகர சபை உறுப்பினரைக் கைது செய்வதற்கு முன்னர், அலரிமாளிகைக்கு முன்பாக வன்முறையைத் தூண்டிய நபர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றார்.

# ரணிலை முழுமையாக ஆதரிப்போம்

எடுக்கப்போகும் அமைச்சு ஒட்டுமொத்த மலையகக் கட்சிகளுக்கு மானதெனவும் தெரிவித்தார்.

காலிமுகத்திடல் சம்பவம் மற்றும் அதனை தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று(17) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்குப் பிரதமர் ஆற்றிய உரையை தான் வரவேற்பதாகவும், இந்த உரையில் பிரதமர் நாட்டின் நிலைமைகள் தொடர்பில் எந்தவிதமான பொய்யையும் கூறவில்லை. நாட்டுக்கு கட்டாயமாக ஒரு தலைமைத்துவம் வேண்டும். அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்துவதன் ஊடாகவே பொருளாதார நெருக்கடி தீர்வு காண முடியும் என்றார். மேலும் இவ்வாறான நெருக்கடி நிலமைகளில் பிரதமர் பதவியை ஏற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இ.தொ.கா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

மக்களின் கருத்துக்களையே நாம் பாராளுமன்றத்தில் பிரதிபளிக்கிறோம். இதன்படியே சுமந்திரன் கொண்டுவந்த பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்காக நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்கு நான் ஆதரவாக வாக்களித்திருந்தேன். எனினும் எங்களுடைய மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் இதனை எதிர்த்து வாக்களித்துள்ளார். இது தொடர்பில் அவர் விளக்கமளிப்பார் என்றார்.

கஸ்டக்காலத்தில் உதவும் எதிரியை நம்பலாம். ஆனால் நீங்கள் நாசமாக வேண்டுமென நினைக்கும் நண்பனை நம்பக்கூடாது என்றார்.

# 664 பேர் கைது

இந்த சம்பவம் தொடர்பில் மொத்தமாக 664 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பேச்சாளர் குறிப்பிட்டார்.

அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை தொடர்ந்து 43 பேருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பலரை மன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் பணிப்புரையின் அடிப்படையில் ஏழு எம்.பிக்களிடம் விசாரணை நடத்துவதற்கு சபாநாயகரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எம்.பி.க்களுக்கு எதிராக போதிய ஆதாரம் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் நேற்றையதினம் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டிருந்தால், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு அவர்களைப் பணிக்கும் படி சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சுமந்திரனின் பிரேரணை...

உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை 51 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும், கடமைகளையும் முறைப்படி நிறைவேற்ற முடியாமற்போனதன் மீதான பாராளுமன்றத்தின் அதிருப்தியைத் தெரிவிக்கும் பிரேரணையை நேற்று செவ்வாய்க்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்காக நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்திவைப்பது தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

சுமந்திரன் எம்.பி முன்வைத்த பிரேரணையை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல வழிமொழிந்தார். ஆனால் இந்தப்பிரேரணைக்கு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன கடும் எதிர்ப்பை வெளியிட்டார். ஜனாதிபதியின் மீது அதிருப்தியைத் தெரிவிக்கும் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்க முடியாது என்று வாதிட்டார். ஜனாதிபதி மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை கடந்த 11ஆம் திகதி ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டதுடன்,பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஐந்து நாட்களின் பின்னரே அதாவது 20ஆம் திகதி இதனை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும் என்றார்.

# பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ

23 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்கெனவும் சபாநாயகர் அறிவித்தார். இதன்படி 31 மேலதிக வாக்குகளால் அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

# எரிபொருள், மின் கட்டணத்தை அதிகரிக்க முயற்சி

எனினும், இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் அதிகளவிலான பணியாளர்கள் உள்ளமை மற்றும் மோசமாக முடிவெடுப்பது நட்டத்துக்கு காரணம் எனவும் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பெற்றொல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பது நியாயமற்றது எனவும் அரச நிறுவனங்களில் பதிவாகும் ஊழல் சம்பவங்களை அம்பலப்படுத்த இயக்கம் தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விலையை அதிகரிப்பதற்கு முன்னர் இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்து ஆராயுமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்த இயக்கம், இவ்வாறான விசாரணைகளின் அடிப்படையில் விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்தது.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

## ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலர்
# காடுகளில் ஒளிந்திருக்கிறார்கள்

பா.நிரோஸ்

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு பாராளுமன்றத்துக்கு வரமுடியாதுள்ளது. பலர் இன்னும் காடுகளில் ஒளிந்திருக்கிறார்கள். சில குழுக்கள், மக்கள் பிரதிநிதிகளான எமக்கு, மக்கள் மத்தியிலிருந்த இடத்தை இல்லாது செய்திருக்கிறார்கள் என, புதிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சபையில் உரையாற்றிய அவர், பாராளுமன்றத்துக்கு புதிதாக இம்முறையே நான் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். எனினும் அவைத் தலைவராக நான் நியமிக்கப்பட்டபோது, பக்கச்சார்பற்ற முறையில் நியாயமாகத்தான் செயற்பட்டேன்.

எனது வரையறைக்குள் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கிறேன். பிரதி சபாநாயகருக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு நாடு முழுவதிலும் எதிர்ப்புகள் இருக்கின்றன. எனினும் பாராளுமன்ற

> **நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை, பயங்கரவாத செயற்பாடாகவே பார்க்கிறேன். இந்தப் பயங்கரவாத செயற்பாடுகளால் அப்பாவி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உயிர் பலியாகியுள்ளது**

சம்பிரதாயங்களுக்கு உட்பட்டே, பிரதி சபாநாயகர் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேர் கொலை செய்யப்பட வேண்டுமென்ற கருத்தொன்று சமூகமயப்படுத்தப்பட்டு உள்ளது. இதனால் கடந்த காலங்களில் பல மோசமான சம்பவங்கள் இடம்பெற்றன. பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகராக வர வேண்டுமென்கிற ஆசை, உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு இருந்தது. நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை நான், பயங்கரவாத செயற்பாடாகவே பார்க்கிறேன். இந்தப் பயங்கரவாத செயற்பாடுகளால் அப்பாவி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உயிர் பலியாகியுள்ளது என்றார்.

# மஹிந்த இடமளித்தது ஏன் ?
## இன்னமும் புரியவில்லை என்கிறார் விமல்

மே 9 ஆம் திகதி நடந்த வன்முறை சம்பவங்கள், திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டவை. அன்றைய தினம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அமைதியாக இருக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்ததாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சபையில் தெரிவித்துள்ளார். பிரதமர், தான் பதவி விலகுவதற்கான மனதை உருவாக்கியிருந்தாலும், அங்கு மக்களைத் தூண்டும் கருத்துகளைக் கூறுவதற்கு அவர் இடமளித்தமை ஏன் என்று புரியவில்லை எனவும் தெரிவித்தார்.

காலிமுகத்திடல் சம்பவம் மற்றும் அதனை தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (17) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே, விமல் வீரவன்ச மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



தாக்குதல் அன்று, அலரி மாளிகைக்கு சென்ற சனக் கூட்டத்தை பார்க்கும் போது, அவர்கள் காலிமுகத்திடலுக்கு சென்றால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியுமாகவே இருந்தது. எவ்வாறாயினும் நாங்கள் பொருளாதார அனர்த்தத்தில் இருக்கின்றோம். இதனை மனித அனர்த்தமாக மாற்றும் திட்டங்களும் இருக்கின்றன. இவ்வாறாக செயற்படும் போது, வெளியில் உள்ளவர்களுக்கு நுழைவதற்கான வாய்ப்பே ஏற்படும். அன்று நடந்த சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அதனுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய வேண்டும்.

பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அலரிமாளிகைக்கு வந்தவர்களை காலிமுகத்திடலுக்கு செல்வதை தடுக்குமாறு கூறியதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் அவரை அமைதியாக இருக்குமாறு அதிகாரிகள் கூறியுள்ளனர். அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அமைதியாக இருக்குமாறே உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவம் செயற்படாது இருந்தது ஏன்? பொலிஸார் செயற்படாது இருந்தது ஏன்? சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சி என்று சர்வதேசத்திற்கு காட்டுவதற்கே முயற்சித்துள்ளனர். இதில் தெரிந்தோ தெரியாமலோ திட்டமொன்று இருந்துள்ளது. ஜோன்ஸ்டன் போன்றோர் அந்தத் திட்டங்களுக்கு உட்சாகமூட்டி உள்ளனர் என்றார்.

# பாராளுமன்றத்துக்குள்
# ஊடகவியலாளர் இருவரின் அலைபேசிகள் பறிப்பு

பாராளுமன்றத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட வந்த பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் இருவரின் அலைபேசிகள், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் பறிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பிரகீத் பெரேரா, ஊடகவியலாளர் கசுன் சமரவீர ஆகியோரின் அலைபேசிகளே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த அலைபேசிகளை மீண்டும் அந்த ஊடகவியலாளர்களுக்கு வழங்குவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு, நாட்டின் நான்காவது தூண் ஊடகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் ஊடகவியலாளர்கள்

> **இந்த அலைபேசிகளை மீண்டும் அந்த ஊடகவியலாளர்களுக்கு வழங்குவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு, நாட்டின் நான்காவது தூண் ஊடகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்**

ஜனநாயக ரீதியாக செயற்படுவதற்குப் பாராளுமன்றத்துக்குள் இடமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி கூட்டம் நடைபெற்று முடிந்த பின்னர், அங்கிருந்த இருவர் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அலைபேசியில் வீடியோ எடுத்ததாகவும், இதனால் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

# வெற்றிடத்துக்கு ஜகத் நியமனம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் மறைவையடுத்து வெற்றிடமாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, அந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜகத் சமரவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணைக்குழு, நேற்று (17) அறிவித்தது.

கடந்த 9ஆம் திகதியன்று 'கோட்டா கோ கம', 'மைனா கோ கம' ஆர்ப்பாட்டத் தளங்களின் மீது பொதுஜன பெரமுன ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து நாடு முழுவதும் பதற்றநிலை அதிகரித்தது. அதன்போது, நிட்டம்புவ பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது, அத்துகோரள எம்.பி மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர்

> **வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி நடத்திய பிரேத பரிசோதனையில், அவர் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது**

ஆகியோர் உயிரிழந்திருந்தனர்.

பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து கட்டடமொன்றில் எம்.பி தஞ்சமடைந்ததாகவும் பின்னர் பொதுமக்கள் கட்டடத்தை சுற்றி வளைத்ததால் அவர் தனது துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் தகவல் வெளியானது.

எனினும், வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி நடத்திய பிரேத பரிசோதனையில், அவர் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி 35 தடவைகள் பொறுப்புகளை மீறியுள்ளார்

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களை பார்க்கையில், ஜனாதிபதி தனது பொறுப்பில் இருந்து 35 தடவைகள் விலகிச் செயற்பட்டுள்ளார் என எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ.சுமந்திரன் கொண்டுவந்த நிலையியல் கட்டளையை இடைநிறுத்துவது தொடர்பான பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றும் போதே, லக்ஷ்மன் கிரியெல்ல இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



அரசியலமைப்பின் பிரகாரம், மக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் பார்க்கும் போது, ஜனாதிபதி 35 தடவைகள் தனது பொறுப்புகளை மீறியுள்ளார். இந்நிலையில் சபாநாயகர் எப்போதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். சபாநாயகர் அரசர்களை பாதுகாக்கும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது. இதேவேளை பாதுகாப்பு அமைச்சருக்கு நாட்டில் எம்.பிக்களின் வீடுகளை பாதுகாக்க முடியாவிட்டால் அவர் எதற்கு என்று கேட்கின்றோம் என்றார்.

# சண்டித்தனம் தொடர்ந்தால் பிணமாகவே செல்ல நேரிடும்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினரின் சண்டித்தனம் தொடர்ந்தால், கொலை செய்யப்பட்ட அமரகீர்த்தி அத்துகோரள எம்.பி எவ்வாறு பிணமாக சென்றாரே, அதே நிலை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்குள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுவந்த ஊடகவியலாளர்களின் அலைபேசிகளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினரே பறித்துள்ளதாகவும் பொதுஜன பெரமுனவினரின் இதுபோன்ற சண்டித்தனங்களாலேயே எம்.பிக்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தும் அளவுக்கு வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.



'கோட்டா கோ கம' மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யாது, ஏனையவர்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர். முதலில் அவர்களைக் கைது செய்ய வேண்டும். இதுபோன்ற சண்டித்தனங்களால் தானே வீடுகள் கொளுத்தப்பட்டன எனவும் தெரிவித்தார்.

# ஒரு நிமிடம் சபையில் மௌனம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் "அமர கீர்த்தி அத்துகோரளவின் மரணம்" என்ற அறிவிப்பு, அரச தரப்பினரின் கடும் எதிர்ப்பையடுத்து "அமரகீர்த்தி அத்துகோரளவின் படுகொலை" என சபையில் அறிவிக்கப்பட்டது.


பாராளுமன்றம் நேற்று (17) செவ்வாய்க்கிழமை கூடியது. இதன்போது இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போது, கடந்த 9 ஆம் திகதி இடம்பெற வன்முறைகளின் போது, அமரகீர்த்தி அத்துகோரள எம்.பி உயிரிழந்தமை தொடர்பில் அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர், "வன்முறையில் 'மரணம்' அடைந்த அமரகீர்த்தி அத்துகோரள எம்.பி எனக்கூற ஆரம்பித்த போது, கூச்சலிட்ட அரச தரப்பினர் "மரணம் அல்ல; படுகொலை என்றே சபாநாயகர் கூற வேண்டும்" என வலியுறுத்தினர்.

அத்துடன்,

> **வன்முறையில் 'மரணம்' அடைந்த அமரகீர்த்தி அத்துகோரள எம்.பி எனக்கூற ஆரம்பித்த போது, கூச்சலிட்ட அரச தரப்பினர் "மரணம் அல்ல; படுகொலை என்றே சபாநாயகர் கூற வேண்டும்" என வலியுறுத்தினர்**

எதிர்க்கட்சியினரைப் பார்த்தும் குறிப்பாக ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவைப் பார்த்தும் கூச்சலிட்டனர். பதிலுக்கு எதிர்க்கட்சியினரும் அரச தரப்பினரை விமர்சித்து கூச்சலிட்டனர். இந்நிலையில் தனது அறிவிப்பில், அமர கீர்த்தி அத்துகோரளவின் 'மரணம்' என்பதனை மாற்றிய சபாநாயகர், "அமரகீர்த்தி அத்துகோரளவின் படுகொலை" எனக்கூறி தனது அறிவிப்பைத் தொடர்ந்தார். அதனைத் தொடர்ந்து அவரின் மறைவுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி சபைக்குள் செலுத்தப்பட்டது.

# எம்.பிக்களின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்



## பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்தார் சபாநாயகர்

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டும், பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டுமுள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரித்து, தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை பலப்படுத்த வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளின் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டிருந்த துரதிர்ஷ்டவசமான சம்பவங்களால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. இதனால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பையும் அதிகரிக்க வேண்டுமென கட்சி தலைவர்களின் கூட்டத்தில் என்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என, பாராளுமன்றத்தின் நேற்றைய (17) அமர்வை ஆரம்பித்து வைத்து சபாநாயகரின் அறிவிப்பை விடுக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி, தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் நடந்து வருவதோடு, வன்முறைச் சம்பவங்களின்போது கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அமரதுங்கவின் உயிரிழப்புக்கும் இதன்போது சபாநாயகர் கடும் கவலையை வெளியிட்டார்.

மேலும் வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கும் சபாநாயகர் தனது கவலையை வெளியிட்டார்.

நினைவேந்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

# அச்சமின்றி வாருங்கள்

■ சண்முகம் தவசீலன்




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில், நினைவேந்தல் நிகழ்வுக்கான பிரமாண்டமான ஏற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அச்சமின்றி அனைவரையும் நினைவேந்தலில் கலந்துகொள்ளுமாறும் வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இன்று (18) உணர்வெளிச்சியுடன் நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத் தலைவர்களில் ஒருவரான அருட்பணி லியோ அடிகளார் மற்றும் பொதுமக்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அகவணக்கம் செலுத்தி, நினைவேந்தல் ஏற்பாட்டு வேலைகளையும் சிரமதான பணிகளையும் நேற்றும் (17) நேற்று முன்தினமும் (16) முன்னெடுத்தனர்.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்துக்குள் இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நினைவேந்தல் செய்ய எந்தத் தடையும் இல்லை என பிரதமர் தெரிவித்தாலும் நினைவேந்தல் வளாகத்துக்குள் இராணுவ காவலரண் அமைக்கப்பட்டமைக்கு உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, நினைவேந்தல் வளாகத்தை சூழ, பொலிஸாரும் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், நினைவேந்தல் வளாகத்துக்குள் வருபவர்களை பொலிஸார் பதிவு செய்து, அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் உறவுகள் குற்றம் சுமத்துகின்றனர்.



தொழில்நுட்பக் கல்லூரி

## மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல்

■ நிதர்சன் வினோத்

யாழ். கலட்டிப் பகுதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி பயிலும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது, இனந்தெரியாத நபர்கள், நேற்று முன்தினம் (16) தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

4 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் குறித்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கித் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## துக்கப் பகிர்வு...

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

(படம்: வி.நிதர்ஷன்)

## அறம் தோற்காது; கஞ்சி பரவட்டும்

■ விநிதர்ஷன்



எப்பொழுதும் அறம் தோற்காது என்றும் சர்வதேச விசாரணைகளுக்கான கதவுகள் திறக்கப்படும் வரை தாயகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரவட்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (17) ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில்,

“இனப்படுகொலை செய்யப்பட்ட யூதர்கள் எவ்வாறு தமது ‘மற்சூ’ என்ற உணவை இனப்படுகொலையின் அடையாளமாகக் கருத்துருவாக்கம் செய்து, விடுதலை வேள்வியை முன்னெடுத்து தேச அங்கிகாரத்தைப் பெற்றார்களோ, அதேபோல் தமிழினமும் ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’யை இனப்படுகொலையின் குறியீடாகக் கடத்தி, விடுதலை வேள்வியைத் தொடர வேண்டும் என்றார்.

நினைவேந்தல் தொடர்பில்

## ரவிகரன், மயூரனிடம் விசாரணைகள்

■ சண்முகம் தவசீலன்



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடமும், கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.மயூரனிடமும் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்தவகையில், மே 18 நினைவேந்தலின் போது, விடுதலைப் புலிகளின் சின்னங்கள் எவையும் பயன்படுத்தக்கூடாது என பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு பிரதமர் மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும், அதேபோல் தாமும் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எவ்வித இடயூறுகளையும் மேற்கொள்ளமாட்டோம் என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்ததாக விசாரணையின் பின்னர் இவர்கள் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை, எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடத்தி முடிக்கவேண்டும் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக நினைவேந்தல் நிகழ்வில், விடுதலைப் புலிகளின் சின்னங்கள் பயன்படுத்தப்படாமல் நினைவேந்தல் நிகழ்வை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

“இந்த நினைவேந்தல் நிகழ்விலே அரசியல் கலப்படம் இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன், இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கென உருவாக்கப்பட்ட அந்த பொதுக் கட்டமைப்பால் நினைவேந்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

“பல வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செயற்பாடுகள் எவ்வித அசம்பாவிதங்களின்றி இடம்பெற்றுவருவதையும், எமது உறவுகள் மிகவும் உருக்கமாகவும் புனிதமாகவும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொண்டுவருவதையும் நாம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்” என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## மீனவரின் சடலம் மீட்பு

■ எம். றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற உதயபுரம் பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது 53) எனும் மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மீனவர், தனது மகனுடன் நேற்று முன்தினம் (16) தொழிலுக்குச் சென்ற வேளை, கடலில் தவறி விழுந்து காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில், நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் மீனவரின் சடலம், நேற்று (17) மீட்கப்பட்டுள்ளது.



பொருளாதார நெருக்கடி:

# ஒரு தேசிய பிரச்சினை

### ரணிலின் தலைமையில் பயணிக்க அதாவுல்லா தயார்

■ நூருல் ஹுதா உமர்


நாட்டு மக்களுக்காக பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தமது கட்சி உறுதியாக இருப்பதாக தேசிய காங்கிரஸின் சட்டம் மற்றும் கொள்கை விவகார ஆலோசகர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகவே தேசிய காங்கிரஸ் பார்க்கிறது. சவால்களை எதிர்கொள்ள புதிய பிரதமர் நியமனத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தேசிய காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தியோகபூர்வ கடிதம் தொடர்பில் கட்சியின் உயர்பீடத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

உயர் பீடம், தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லா தலைமையில், கொழும்பில் நேற்று முன்தினம் (16) மாலை கூடியதாகவும் மர்சூம் மௌலானா தெரிவித்தார்.

தொடர்ந்தும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், “தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இத்தருணத்தில், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மக்களுக்கான உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, புதிய பிரதமரின் செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான முடிவை தேசிய காங்கிரஸின் உயர்பீடம் எட்டியுள்ளது.

“பாராளுமன்றத்தில் ஒன்றாகச் செயற்படும் சக 10 கட்சிகளோடு இணைந்து, தேசிய காங்கிரஸின் கொள்கைகளுக்கு அமைவாக, ஒவ்வொரு விடயதானத்தையும் தனித்தனியாகக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதற்கும் கட்சி உயர் பீடம் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது” என்றார்.



வன்முறை சம்பவங்களில்

## கைதானவர்களுக்கு பிணை கிடைத்தது

■ எப்.முபாரக்

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைதாகிய 15க்கும் மேற்பட்டோருக்கு, கந்தளாய் நீதிமன்ற நீதவான் பிணை வழங்கியுள்ளார்.

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வீடுகள் சேதமாக்கியமை தொடர்பில் பொலிஸாரால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில்

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்




■ ஜவ்பர்கான்

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் குறைவடைந்துள்ள நிலையில், டெங்கு பரவல் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம், கிரமமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இம்மாவட்டத்திலிருந்து கொரோனா, டெங்கு தொற்றுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் மேற்கொண்டுள்ளார்.

மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கமைய, பொது இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களால் சிரமதான நடவடிக்கை, மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.



சாய்ந்தமருதில்

## இரு கடைகளில் கொள்ளை

■ நூருல் ஹுதா உமர்

அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கடைத் தொகுதியில் இருந்த இரு கடைகள் உடைக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஒரு கடையில் இருந்த 57,000 ரூபாய் பணமும் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர், பொலிஸாரிடம் தெரித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்டது

## திட்டமிட்ட படுகொலை

■ வ.திவாகரன்



வடக்கு, கிழக்கில் இறுதிப் போரில் நடந்தது ஓர் அடிப்படை மனித உரிமைகள் மீறலாகும். இந்த மனித உரிமைகள் மீறல், திட்டமிட்டவாறு நடந்தேறிய இனப்படுகொலையே என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், “இன்றைய தினத்தை ஒட்டிய ஜனநாயக போராட்டங்கள், மனிதநேயத்தை நேசிக்கும் அனைவராலும் நினைவு கூரப்பட்டு, ஏற்றுக் கொள்ள வேண்டியவையாகும்.

“இப் படுகொலையை சர்வதேசம் கண்டும் காணாமல் இருப்பதும், எவ்வித கருத்தும் கூறாமல் இருப்பதும் கொலையாளியை பாதுகாக்கும் செயலாகவே தமிழர்களாகிய நாம் பார்க்க வேண்டி உள்ளது.

“இக்கொலைகள் தொடர்பாக ஒரு தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், இவ்வாறான படுகொலையை இனிவரும் காலங்களில் அரச படைகள் புரியாமல் இருப்பதற்கும், புதிய அரசு இக் கொலைகளை ஏற்றுக் கொண்டும், தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் வலுவான சர்வதேசத்தின் கவனயீர்ப்பு செயற்பாடு அவசியமாகும்” என்றார்.

படகு கவிழ்ந்ததில்

## இளைஞன் உயிரிழப்பு

■ எப்.முபாரக்



திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞன் ஒருவர், நேற்று (17) காலை உயிரிழந்துள்ளார் என குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர், இறக்ககண்டி, வாழையூற்று பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய துஷ்யந்தன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று இளைஞர்கள் இணைந்து படகில் சென்றபோது, படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் மற்ற இருவரும் உயிர் தப்பியுள்ளனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளைஞனின் சடலம், நிலாவெளி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில்

# 106 வர்த்தகர்கள் அபராதம் செலுத்தினர்

■ டி.ஷங்கீதன்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நான்கு மாதத்தில் 12 இலட்சம் ரூபாய் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது என நுவரெலியா பாதுகாப்பு நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

106 வர்த்தகர்களுக்கு எதிராக நுவரெலியா, வலப்பனை, ஹட்டன், நாவலப்பிட்டி ஆகிய நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கப்பட்டு, இந்த அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காகவே வர்த்தகர்கள் மீது வழங்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக அந்த அதிகாரி தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் பொது மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றார்.



அதிலும் குறிப்பாக, தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சில வர்த்தகர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்பது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. எனவே, அதிகாரசபை என்ற வகையில் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்படுகின்றோம்.

நுவரெலியா மாவட்டத்தில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 106 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்பாக அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்கின்ற சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகளுக்கு எதிராகவே அதிக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் விவசாயத்திற்காக பாவிக்கப்படுகின்ற உரம், கிருமிநாசினிகளை விற்பனை செய்கின்ற வியாபாரிகள், மருந்தகங்கள், எரிவாயு விற்பனையாளர்கள் போன்ற வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் கடந்த நான்கு மாத காலப்பகுதியில் 106 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மூலமாக, 12 இலட்ச ரூபாய் தண்டப்பணமாக அறிவிடப்பட்டதுடன் 5,32,789 ரூபாய் அரச நிதியாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, நாம் தொடர்ச்சியாக சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றோம். இது தொடர்பான முறைபாடுகளை 052-2223933 என்ற இலக்கம் அல்லது அவசர அழைப்பான 1977 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என நுவரெலியா பாதுகாப்பு நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரி தெரிவித்தார்.



## மலையகத்தில் எரிபொருள் வரிசை தொடர்கின்றது

■ மலைவாஞ்ஞன்

மண்ணெண்ணெய்க்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகாலை முதல் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக நுவரெலியா மாவட்டத்தில் எரிவாயு தட்டுப்பாடு காணப்படுகின்றது. அதிகமான மக்கள் மண்ணெண்ணெய் அடுப்பை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். எனினும் மண்ணெண்ணெய்க்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் அதிகாலை நான்கு மணி தொடக்கம் எரிபொருள் நிலையங்களில் மக்கள் காத்திருக்கின்றனர்.

இதேவேளை, பெற்றோல், டீசல் பெற்றுக்கொள்வதற்காக வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதனை காணக்கூடியதாக இருந்தது.

தூர சேவையில் ஈடுபடும் ஒருசில தனியார் பஸ்கள், டீசல் இல்லாததன் காரணமாக சேவையில் ஈடுபடவில்லை.

வெளிமாவட்டங்களில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள், மலையக பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாகவும் இந்த பஸ்களில் சாதாரண கட்டணத்தை விடவும் கூடுதலாக பணம் அறவிடுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு:


## நோர்வூட்டில் நால்வர் கைது

■ காமினி பண்டார

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்ரி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நால்வர் நேற்றுமுன்தினம் (16) பகல் கைதுசெய்யப்பட்டனர்.

கெசல்கமுவ ஓயாவுக்கு இரு புறங்களில் இருக்கும் பற்றைக்காடுகளுக்கு அண்மித்த பகுதியில், சுற்றாடலுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தும் வகையில் மிக நீண்டகாலமாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் நால்வரும், பொகவந்தலாவை, நோர்வூட் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவித்த பொலிஸார்,



அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகத் தெரிவித்தனர்.

சாமர சம்பத் எம்.பிக்கு

## பேஸ்புக்கில் கொலை அச்சுறுத்தல்

■ ராமு தனராஜா



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சாமர சம்பத் தசநாயகவுக்கு பேஸ்புக் ஊடாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முகப்புத்தகத்தில் 'நீ இன்னும் உயிருடன் இருக்கிறாயா? எமது பட்டியலில் நீயும் இருக்கின்றாய்' என பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் தொடர்பில், சாமர சம்பத் தசநாயகவின் ஆலோசனைக்கு அமைய, அவரின் செயலாளரால் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் (16) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.



## அலங்கார உற்சவப் பெருவிழா...

பதுளை, ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா நேற்று (17) வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆரம்பப் பூஜை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன். இதன்போது தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் க. ஜெயநாயகம், நிதிச் செயலாளர் ந. இரவீந்திரன், செயலாளர் ஆர்.எம். கிருஸ்ணசாமி ஆகியோர் பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றனர். (எம். செல்வராஜா)



கேகாலை மாவட்டத்தில் இறால் வளர்ப்பு

## மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்திலுள்ள 5 குளங்களை மையப்படுத்தி இறால் வளர்க்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த 5 குளங்களிலும் இறால் குஞ்சுகளை விடும் செயற்பாடு, முன்னெடுக்கப்பட்டதாக கேகாலை மாவட்ட நீர் உயிர்வாழ் திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்கீழ், மாவனெல்ல பிரதேச செயலகப் பிரிவின் அம்பதெனிய குளம், ரம்புக்கனை பிரதேச செலயகப் பிரிவில் அம்புவன்கல குளம், ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் தெரனுவ குளம், கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவில் நான்கல்ல குளம் ஆகியவற்றில் 1,000க்கும் மேற்பட்ட இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளது.

இதற்காக கடற்றொழில் அமைச்சால் 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த குளங்கள் அமைந்துள்ள பகுதிகளிலுள்ள விவசாய சங்கங்கள் ஊடாக இந்த இறால் வளர்ப்பு செயற்பாடு முகாமைத்துவம் செய்யப்படவுள்ளது.

போலி பூச்சிக்கொல்லி விற்பனை

## நுவரெலியாவில் இருவர் கைது

■ டி. சங்கீதன்

விவசாயத் திணைக்களத்தின் அனுமதி அல்லது சிபாரிசு இன்றி போலியான பூச்சிக்கொல்லி, விவசாய இரசாயனப் பொருட்களை விற்பனை செய்த இருவரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பொருட்களை நுவரெலியா நகரின் வீதியோரத்தில் விற்பனை செய்யும் போது நுவரெலியா பொலிஸார் கடந்த 15ஆம் திகதி பிற்பகல் சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கந்தப்பளை, ராகலை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், பதுளை, ஹாலிஎல



பிரதேசத்தை சேர்ந்த ஒருவராலேயே இந்த போலி விவசாய இரசாயனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு, நாட்டின் பல பாகங்களிலும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட போது, அவர்களிடம் இருந்த சுமார் 100 போத்தல்கள் விவசாய இரசாயன திரவம், காட்சிப் பலகை, பொருட்களை விற்கப் பயன்படுத்திய மேசை ஆகியவற்றைக் கைப்பற்றிய பொலிஸார், இரு சந்தேக நபர்களையும் பிணையில் கையெழுத்திட்டு விடுவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நுவரெலியா விவசாய திணைக்களத்தின் உதவியுடன் நுகர்வோர் அதிகாரசபையின் அறிக்கையைப் பெற்றதன் பின்னர், இன்று நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

உணர்வுபூர்வமான பேரெழுச்சி போராட்டத்துக்கு

## மலையக இளைஞர்களும் ஆதரவு வழங்க வேண்டும்

■ பி.கேதீஸ்



காலி முகத்திடலில் எந்தவித இன, மத, கட்சி பேதமில்லாமல் ஒன்றிணைந்து, ஒரு மாதத்திற்கு மேலாக நடத்தப்பட்டுவரும் ஓர் உணர்வுபூர்வமான பேரெழுச்சி போராட்டத்திற்கு மலையக இளைஞர், யுவதிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இளைஞர், யுவதிகள் நடத்திய போராட்டத்தால் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரம் விலகியுள்ளார். இன்னும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவில்லை.

ஜனாதிபதி பதவி விலகும் வரை தொடர்ந்து நடத்தும் இந்தப் போராட்டத்திற்கு இன, மத, கட்சி பேதமில்லாமல் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இனவாதம், மதவாதம் ஆகியவற்றைப் பேசி மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, ஆட்சி பீடம் வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று இன, மத,கட்சி பேதமில்லாமல் ஒன்றிணைந்த இளைஞர் யுவதிகளால் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இனவாதம் பேசுபவர்களுக்கு நல்ல பாடத்தினை இளைஞர், யுவதிகள் புகட்டியுள்ளார்கள். எந்த ஒரு நாட்டிலும் இனவாதம், மதவாதம் பேசும் அரசியல்வாதிகள் நீண்ட காலம் ஆட்சியில் நிலைத்திருந்ததில்லை. இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, ஆட்சி நடத்தியதை இன்று இளைஞர்கள் மாத்திரமல்ல அனைத்து மக்களும் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றார்.

## விக்டோரியாவின் நீர்மட்டம் உயரவில்லை

■ மொஹமட் ஆஸிக்

மலையகத்தில் நீரேந்தும் பிரதேசங்களில் கடும் மழை பெய்து வருகின்ற நிலையிலும் விக்டோரியா நீர் தேக்கத்தின் நீர் மட்டம் இன்னும் உயரவில்லை.

இது தொடர்பில், மஹாவலி அதிகார சபையின் உயர் அதிகாரி கருத்து தெரிவிக்கையில், மலையகத்தின் பல பகுதிகளிலும் மழையுடனான



வானிலை நிலவினாலும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீரேந்து பிரதேசங்களில் போதிய மழை வீழ்ச்சி பதிவாகவில்லை என்றார்.

சதொச கிளைகளும் நேரத்துக்கு மூடப்படுவதால்

## நுகர்வோர் பாதிப்பு

■ அஜித்லால் சாந்தஉதய

நாட்டில் மின்தடை அமல்படுத்தப்படுவதன் காரணமாக, ஜெனரேட்டர்களுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், சதொச விற்பனை கிளை நிறுவனங்கள் முன்கூட்டியே மூடப்படுவதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் நிர்ணய விலையில் விற்கப்படும் நிலையில், எரிபொருள் இன்மை, மின்துண்டிப்பு என்பவற்றை காரணம் காட்டி, சதொச விற்பனை நிலையங்கள் முன்கூட்டியே மூடப்படுவதாகவும் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இந்நிலையில் நேற்று (17) காலை 9 மணியிலிருந்து இரத்தினபுரி-ஊருபொக்க பகுதியிலுள்ள சதொச நிலையத்தில் பொருள் கொள்வனவுக்காக நீண்ட வரிசையில் நுகர்வோர் காத்திருந்த போது, மின் துண்டிப்பால் பொருட்களை விற்பனை செய்ய முடியாது என தெரிவித்து சதொச நிலையத்தை மூடியுள்ளதாக நுகர்வோர் தெரிவித்தனர்.



# வலி நிறைந்த மனங்களுக்கு நினைவு கூர்ந்தால்த்தான் ஆறுதல்

இன்றைக்கு 13 வருடங்களுக்கு முன்னர், இதேபோன்ற நாளொன்றில்தான், மனங்களில் வேதனைகளை சுமக்கச் செய்த சம்பவங்கள், பச்சை பச்சையாக வடக்கில் அரங்கேற்றப்பட்டன. தென்னிலங்கையைப் பொறுத்தவரையில், 'பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது' என்ற செய்தி, பலரையும் மனங்குளிரச் செய்திருந்தது.

தேசிய கொடிகளை ஏந்திக்கொண்டு, வாகனங்களின் பயணித்து, வெற்றிக் கோஷமெழுப்பி, புகழ்பாடிய காலம் மலையேறி விட, அதே தேசிய கொடியுடன் மக்கள் வீதிக்கு இறங்கி, "வீட்டுக்கு போ" என கோஷமெழுப்பும் வகையில், நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஆக, எல்லாமே மக்களின் மனங்களில்தான் இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

இழப்புகளை வகை பிரித்துப் பார்த்து, மனிதத்தை கேள்விக்கு உட்படுத்துவதை விடவும், இரண்டு பக்கங்களிலும் அப்பாவி மக்கள் பலரும் காவுகொள்ளப்பட்டனர். அவயவங்களை இழந்து பலரும் அங்கவீனர்களாயினர். மதிப்பிட முடியாத சொத்துகள் அழித்து, நாசமாக்கப்பட்டன.

மே 18 ஆம் திகதி மட்டுமன்றி, அன்றிலிருந்து 30 க்கும் மேற்பட்ட வருடங்கள் பின்னோக்கி பார்த்தோமெனில், உயிரிழப்புகளையும் விளைவிக்கப்பட்ட சொத்துகளுக்கான சேதங்களையும் கணக்கிடவே முடியாது.

வீட்டிலிருந்து வெளியேறும் ஒருவர், மீண்டும் வீட்டுக்குத் திரும்புவாரா என்ற பேரச்சம், ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருந்தது.

பெரும்பாலான தமிழர்கள், வீடுகளை விட்டு வெளியே தலையை காண்பிப்பதே இல்லை. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படலாம் என்பதே அவ்வாறானவர்களின் மனங்களிலிருந்த சந்தேகமாகும். இன்றும் கூட, அந்தச் சந்தேகம் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களிடத்தில் வடுக்களாய் பதிந்திருக்கின்றது. இன்றைய நினைவுகூரலுக்குப் பின்னர், பலரும் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவார்கள். இவையெல்லாம் கடந்தகால படிப்பிணைகளாகும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும், 'புலிப் பூச்சாண்டி' காண்பிக்கப்பட்டது. இது, இரண்டு இனங்களுக்கு இடையிலான சந்தேகப்பார்வையை, மேலும் விரிசலடையச் செய்துவிடும். இவ்வாறான நிலையில்தான், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம், இன்றுடன் (18) நிறைவுக்கு வருகின்றது.

பல்லினங்களைக் கொண்ட நாடொன்றில், பல கலாசாரங்கள் கடைப்பிடிக்கப்படும். அவற்றைக் கட்டுப்படுத்தி, தடுப்பதாக நினைத்து, குறிப்பாக நினைவுகூரலை, சர்வதேச செய்தியாக்கி விடக்கூடாது. மரணித்த ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் நினைவுகூரப்படுகின்றனர்.

பயங்கரவாதிகளை நினைவுகூர்ந்து அவர்களின் எண்ணங்களை, மீண்டும் மண்ணில் விதைத்துவிடக்கூடாது என்பதற்காக, உலக பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்களின் சடலங்கள், கல்லோடு கட்டி ஆழ்கடலில் போடப்பட்டுவிடுகின்றன. இங்கு புலிகளின் கல்லறைகள், வேரோடு பிடுங்கி எடுக்கப்பட்டன.

யுத்தத்தில் மரணித்த படைத்தரப்புகளைச் சேர்ந்தவர்களுக்காக, நாளை (19) நினைவுகூரல் முன்னெடுக்கப்படும். நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியான நிலைமையில், நினைவுகூரலுக்காக பிரதான ஏற்பாடுகள் எவையும் செய்யவில்லையென அறியமுடிகின்றது.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், புலிகள் மட்டுமன்றி அப்பாவி மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களை நினைவுகூர்வதற்கு இடையூறு செய்யாமல் இருந்தாலே, வலி நிறைந்த மனங்களுக்கு ஓர் ஆறுதல் கிட்டும் என்பதை, நாமும் நினைவுகூர்கின்றோம்.

தமிழ்Mirror க்கு
எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணிலிடமும் புதிய தீர்வுகள் இல்லை



எம்.எஸ்.எம். ஐயூப்

ஆறாவது முறையாக ரணில் விக்கிரமசிங்க, மே 12 ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். அவற்றில், 'நல்லாட்சி அரசாங்கம்' என்றழைக்கப்பட்ட 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில், அவர் மூன்று முறை பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

முதன் முதலாக ரணில், 1993 ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொல்லப்பட்டதை அடுத்து, அப்போதைய பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றதன் பின்னர், பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அதனை அடுத்து, 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார். 2015ஆம் ஆண்டு ஜனவரியில், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாமலேயே ரணில் மீண்டும் பிரதமரானார்.

2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்பட்டார். 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், மைத்திரிபாலவால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் அவராலேயே டிசெம்பர் மாதம் அதே பதவிக்கு நியமிக்கப்பட்டார். இப்போது ரணில், ஆறாவது முறையாகவே பிரதமர் கதிரையை அலங்கரிக்கிறார்.

இதில் விந்தை என்னவென்றால், எந்தவொரு முறையும் அவர், பிரதமர் பதவிக் காலம் பூரணமாக முடிவடையும் வரையும் பதவியில் நீடித்திருக்கவில்லை என்பதாகும்.

தற்போது நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதாரம், அரசியல் சார்ந்த பாரிய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே, ரணிலை இப்போது பிரதமராக, ஜனாதிபதி கோட்டாபய நியமித்துள்ளார். அந்த நோக்கம், எவ்வளவு தூரத்துக்கு நிறைவேறும் என்பது இப்போதே கூற முடியாது. அதேவேளை, இந்த நியமனம் அரசியல் நெருக்கடியை மேலும் சிக்கலாக்குமோ என்ற சந்தேகமும் எழுகிறது.

பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, அரசாங்கத்துக்கு எதிராக நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி, காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்டு தொடரும் ஆர்ப்பாட்டமே, அவற்றின் மையப் போராட்டமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையாக உள்ளது. அதற்கிடையே ஜனாதிபதி பதவி விலகத் தேவையில்லை; தற்காலிக சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை நியமிக்க வேண்டும் என மைத்திரிபால தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் ஆளும் கட்சியிலிருந்து விலகியிருக்கும் 10 சிறிய கட்சிகளும் கோருகின்றன. தமக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்ட கோரிக்கையாகவே இது தெரிகிறது.

ஏனெனில், நாட்டில் தற்போதைய பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம், ஜனாதிபதியின் தூரநோக்கற்ற நடவடிக்கைகளே என்பது தெளிவாக இருக்கும் நிலையில், ஜனாதிபதி அவ்வாறே இருக்க சர்வகட்சி அமைச்சரவை ஒன்றை நியமிக்க வேண்டும் என்பது, தமக்கும் அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டும் என்பதாகும். இதற்காக அவர்கள், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஒரு கட்டத்தில் வேறு வழியின்றி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டார். இதனை அடுத்து, தமக்குள்ள மக்கள் ஆதரவைக் காட்டி, அத்தோடு அரச எதிர்ப்பையும் அடக்கி, தமது பதவியை காத்துக் கொள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டார்.

அதன் பிரகாரம், மே மாதம் ஒன்பதாம் திகதி மஹிந்த ராஜபக்ஷ, ஆயிரக்கணக்கான தமது ஆதரவாளர்களை, தமது உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு அழைத்து, அவர்கள் மூலம் தமக்கு ஆதரவைத் தெரிவிக்கச் செய்து, பின்னர் காலி முகத்திடலில் இருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்து விரட்டவும் அவர்களை ஏவினார்.

ஆனால், அவர் போட்ட கணக்கு பிழையாகிவிட்டது. ஒரு மாத காலமாக மிகவும் சாத்வீகமாக ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த ஆரப்பாட்டக்காரர்கள், உண்மையிலேயே பொது மக்களின் வேதனையின் வெளிப்பாடாகவே அமைந்து இருந்தனர்.

எனவே, தொடர்ந்து நாளாந்தம் வந்த இந்த ஆரப்பாட்டச் செய்திகள் காரணமாக, மக்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே ஒருவித ஆன்மிக பிணைப்பு ஏற்பட்டு இருந்தது. இந்த நிலையில் தாக்குதல் பற்றிய செய்தி, ஒரு சில நிமிடங்களில் சமூக வலைத்தளங்கள் மூலமாக, நாடு முழுவதிலும் பரவியது. மக்கள் கொதித்தெழுந்தனர். பிரதமர் மஹிந்த, பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, உயிரைப் பாதுகாத்துக் கொள்ள திருகோணமலை கடற்படைத் தளத்தில் பதுங்க வேண்டியேற்பட்டது.

இதனால், அரசாங்கம் மேலும் நெருக்கடியை எதிர்நோக்கியது. பிரதமர் பதவி விலகியதை அடுத்து, அமைச்சரவை தாமாகவே கலைந்துவிடுகிறது. இந்த நிலையில், நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லாத நிலைமை உருவாகியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரே வழியான, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி பெறுவதற்கும் இது தடையாக அமைந்துவிட்டது. ஏனெனில், அந்த உதவி பெறுவதென்றால், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்து இருந்தது.

எனவே, எவரையாவது பிரதமராக நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டு இருந்தது. அவர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் அணுகினார். நாட்டை பொறுப்பேற்க, தாமும் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூறிய போதிலும், அதற்காக ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற நிபந்தனையில், அக்கட்சி உறுதியாக இருந்தது. அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியை ஜனாதிபதி அணுகவில்லை.

சஜித், ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற நிபந்தனையை ஆரம்பத்தில் விதித்த போதிலும், ரணில் பிரதமராக நியமிக்கப்படப் போவதாகத் தெரியவந்தவுடன், அந்த நிபந்தனையை சற்றுத் தளர்த்த முன்வந்தார். ஆனால், அப்போது ரணிலை பிரதமராக நியமிக்க, ஜனாதிபதி இறுதி முடிவை எடுத்திருந்தார்.

உண்மையிலேயே, ஜனாதிபதி ரணிலையே மிகவும் விரும்பி இருப்பார். ஏனெனில், மார்ச் மாதம் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் இருந்தே, அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப் போல்தான், ரணில் நடந்து கொண்டார்.

ஜனாதிபதி வெளியேற வேண்டும் என்ற ஏனைய எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை, ரணில் முழு மனதுடன் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தவிர்ந்த ஏனைய கட்சிகளில் இருந்து, பிரதமர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதையே ஜனாதிபதி விரும்பினார். அதன் மூலம், இது புதிய அரசாங்கம் என்றதொரு தோற்றத்தைக் காட்டி, மக்களின் எதிர்ப்பை குறைப்பதே அவரது நோக்கமாகியது.

அதேவேளை, பொருளியல் சார்ந்த விடயங்களை விளக்குவதில், ரணில் திறமை காட்டி வந்தார். எனவே, ரணில் பிரதமரானால் நாட்டின் பிரச்சினைகள் தீரும் என்று சிலர் நினைத்தனர்; ஜனாதிபதியும் அவ்வாறே நினைத்திருக்கலாம்.

ரணிலுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையில்லை என்று பலர் அவரை விமர்சிக்கின்றனர். ஆனால், 2015ஆம் ஆண்டு ஜனவரியில் பிரதமரான போதும், அவருக்கு அந்தப் பெரும்பான்மை இருக்கவில்லை. இப்போது, சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்களும் மக்கள் விடுதலை முன்னணியும், அன்று அதனை எதிர்க்கவில்லை.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரணிலை, மைத்திரிபால பதவி நீக்கம் செய்து, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்த போது, மஹிந்தவுக்கும் அந்தப் பெரும்பான்மை இருக்கவில்லை. அப்போது, மஹிந்தவின் ஆதரவாளர்கள் அதனை எதிர்க்கவில்லை.

ரணில் பிரதமராகியதற்கு மறுநாளிலும் அதற்கு அடுத்த நாளிலும், டொலருக்கான ரூபாயின் பெறுமதி சுமார் 10 ரூபாயால் குறைந்தது. அதற்காக அவர் எதையும் செய்யவில்லை. அவ்வாறு செய்ய அவருக்கு நேரம் இருக்கவும் இல்லை. டொலரின் பெறுமதியை அவ்வாறு வித்தைகளால் குறைக்கவும் முடியாது. அது, மத்திய வங்கி எடுத்த சில தற்காலிக் நடவடிக்கைகளின் விளைவாகும். எனினும், ரணிலே அதற்குக் காரணம் என சில ஐ.தே.க தலைவர்கள் கூறினர். இது வழமையான ஏமாற்றுக் கதையாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடமும் சில வெளிநாடுகளிடமும் நிதி உதவி பெறுவதையும் இலங்கையின் கடன் பழுவைக் குறைக்குமாறும் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான தவணைக் காலத்தை ஒத்திப் போடுமாறும் வெளிநாடுகளிடம் கோருவதைத் தவிர, ரணிலிடமும் தற்போதைய பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நடவடிக்கைகள், மத்திய வங்கியின் புதிய ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் அப்போது இருந்த நிதி அமைச்சர் அலி சப்ரியும் ஆரம்பித்தவையாகும். தீர்வுக்கு முன்னர், மக்கள் மேலும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று அலி சப்ரி கூறியதையே ரணிலும் கூறுகிறார்.

எவ்வாறாயினும், எல்லோரும் பின்வாங்கும் நிலையில் பிரதமர் பதவியை ரணில் ஏற்றதைப் பாராட்ட வேண்டும். ஏனெனில், இந்த வாரம், புதிய பிரதமர் ஒருவருடன் புதிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்காவிட்டால், தாமும் இராஜினாமாச் செய்வதாக மத்திய வங்கி ஆளுநர் எச்சரித்து இருந்தார்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால், நாடு மேலும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கும். ரணிலின் நியமனம், 'கோட்டா வெளியேறு' என்று இளைஞர்களும் எதிர்க்கட்சிகளும் நடத்தும் போராட்டத்தை சற்று மழுங்கடித்தாலும், மக்கள் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளின் நிலையிலிருந்து பார்த்தால், ரணிலின் முடிவைக் குறைகூற முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

இறுக்கமில்லாத தளர்வு நிலையில் மனம் மௌனமாகச் சதிராடும். கலகலப்புகள், சலனங்கள், அதிர்வுகள் என்பவற்றின் போது, மௌனம் எப்படி உருவாகும்? சிந்திக்கும் நிலையை இழந்துவிடும்.

துன்பங்கள் சூழும்போது, உண்மையான யதார்த்த நிலைவரங்களை மறந்துவிடுகின்றனர். இதுவிடயத்தில், கற்றவர், கற்காதவர் எனும் பேதமின்றி பாதிக்கப்படுகின்றார்கள்.

உலக நியதிகளுக்கு உட்பட்டே, மனித இனம் இயங்குகின்றது. இன்பத்தில் புளகாங்கிதம் அடைவதும் துன்பத்தில் சுருண்டு விழுவதும் வழக்கமாகி விட்டன.

மீளாத நிலை என்று எதுவும் கிடையாது. இவை கால ஓட்டத்தின் பின்னரே உருவாகின்றன. தொடர்ந்து சோர்வை, கவலைகளை மறைக்க, இயற்கை மாற்றங்கள் உருவாகிவிடுகின்றன. இவைகூட இறைவன் செயல்தான்.

உலகம் இயங்கியே ஆக வேண்டும். இங்கு சுறுசுறுப்பாக வாழ்ந்தேயாக வேண்டும். எந்தவொரு விடயத்திலும் சுருண்டு போக முடியாது. இயங்குக! பலம் அதிகரிக்கும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

குஞ்சுக்குளம் தொங்கு பாலம்:

### சுற்றுலா மையத்தின் அவலநிலை

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில், 2014ஆம் ஆண்டு வடமாகாண சபையின் நிதியில் அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மைய கட்டடத்தொகுதி, பாழடைந்த நிலையிலும் பொருட்கள் உடைக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுற்றுலா மையம், 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி, அப்போதைய வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குறித்த சுற்றுலா மையம், நானாட்டான் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

இந்த நிலையில், குறித்த சுற்றுலா மையம், தற்போது அடர்ந்த காடு போல் காட்சியளிப்பதோடு, குறித்த மைய கட்டடத்தொகுதி சேதமாக்கப்பட்டும் பொருட்களும் உடைக்கப்பட்டுள்ளன.

பல இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்கள் ஆகியுள்ள நிலையில், இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு மக்கள் பாவனை இன்றி காணப்படுகின்றமை குறித்து, உரிய அதிகாரிகள் கவனயீனத்துடன் செயற்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக, நானாட்டான் பிரதேச சபை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–ரொஸாரியன் லெம்பர்ட்

மும்பை

# முத்தம் கொடுப்பது பாலியல் குற்றம் அல்ல

முத்தமிடுவதும் கட்டிப்பிடிப்பதும் இயற்கைக்கு மாறான, பாலியல் குற்றங்கள் அல்ல என்று 14 வயது சிறுவனை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைதாகி, சிறையில் அடைக்கப்பட்ட நபருக்கு பிணை வழங்கி, மும்பை உயர்நீதிமன்றம் முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையை சேர்ந்த ஒருவர், கடந்தாண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி உள்ளூர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில், 'வீட்டின் அலுமாரியில் வைத்திருந்த பணத்தைக் காணவில்லை. என் மகனிடம் விசாரித்ததில், அவன் ஒன்லைன் கேம் விளையாடியதையும், அந்த 'ஆப்பை ரீசார்ஜ்' செய்வதற்காக, அதேபகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் பணம் கொடுத்தாக கூறினான்' என குறிப்பிட்டிருந்தார்.

மேலும், 'அந்த நபர் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக, எனது மகன் கூறினான். எனவே, பாலியல் வன்கொடுமை செய்த நபர் மீது, நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பொலிஸில் செய்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிட்டுள்ளார். அதையடுத்து, சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து, பொலிஸார் அந்த நபரை கைது செய்து சிறையில் அடைத்தனர். குற்றம்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் பிணை கோரி, மும்பை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அனைத்து தரப்பு விசாரணையையும் கேட்டறிந்த உயர்நீதிமன்ற நீதிபதி அனுஜா பிரபுதேசாய் அளித்த உத்தரவில்,

"குற்றம்சாட்டப்பட்ட நபர் பாதிக்கப்பட்டவரின் அந்தரங்க உறுப்பைத் தொட்டும், அவரது உதடுகளில் முத்தமிட்டதாக கூறப்படுகிறது. இது, இயற்கைக்கு மாறான பாலியல் குற்றமாக இருக்க முடியாது. ஆண், பெண் அல்லது மிருகத்துடன் தானாக முன்வந்து உடலுறவு கொள்பவருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று சட்டம் கூறுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுவனின் மருத்துவப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடும்படியான ஆதாரம் இல்லை. எனவே, கடந்த ஓராண்டாக சிறையில் இருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு, நிபந்தனை பிணை வழங்கப்படுகிறது" எனத் தெரிவித்தார்.



லும்பினி

## இந்தியா– நேபாளத்துக்கு இடையே
# ஒப்பந்தங்கள் கைச்சாத்து

புத்த பூர்ணிமாவை முன்னிட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேபாளத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேபாள பிரதமரும், இந்திய பிரதமரும் புத்தர் ஞானம் அடைந்த போதி மரத்திற்கு தண்ணீர் ஊற்றி இருவருக்கும் இடையிலான நட்பை வெளிப்படுத்தினர்.

கோவிலை ஒட்டி அமைந்துள்ள அசோக தூண் அருகே இருவரும் தீபம் ஏற்றினர். கி.மு 249இல் பேரரசர் அசோகரால் நிறுவப்பட்ட தூண், லும்பினி புத்தர் பிறந்த இடம் என்பதற்கான முதல் கல்வெட்டுச் சான்றாக திகழ்கிறது. இந்நிலையில், இந்திய பிரதமர் மோடி, நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா ஆகியோர் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அப்போது, தற்போதைய ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, இருதரப்பு கூட்டுறவில் புதிய பகுதிகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு கலாசாரம், கல்வித்துறைகளில் ஒத்துழைப்புக்கான ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

சென்னை

# தாயின் சடலம்; 'டிரம்மில்' அடக்கம்

இறந்த தாயை, வீட்டிலுள்ள 'பிளாஸ்டிக் டிரம்'மில் அடக்கம் செய்துள்ளார் மனநலம் பாதிக்கப்பட்ட மகன். சென்னை, நீலாங்கரை, சரஸ்வதி நகரைச் சேர்ந்தவர் செண்பகம், 86 வயது. இவரது இளைய மகன் சுரேஷ், 53 வயது. டெய்லரான இவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர். கடந்த நான்காண்டாக சிகிச்சை பெற்று வருகிறார்.இவருக்கு மனைவி, இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

இரண்டு வாரத்திற்கு முன், தம்பதி இடையே ஏற்பட்ட சண்டையில், மனைவி, பிள்ளைகளுடன் அவரது தாய் வீட்டுக்கு சென்றார்.சுரேஷ் தாயுடன் வசித்து வந்தார். சுரேஷ் அக்கம்பக்கத்தில் யாருடனும் பேசமாட்டார். சில நாள்களாக, செண்பகத்தின் நடமாட்டமும் வெளியே இல்லை.சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர், நேற்று முன்தினம் (16), பெருங்குடியில் உள்ள அவரது மூத்த மகன் பாபுவிடம் தகவல் தெரிவித்தனர். பாபு வீட்டிற்கு சென்றபோது, சுரேஷ் உள்ளே அனுமதிக்கவில்லை.


இது குறித்து பாபு நீலாங்கரை பொலிஸில் புகார் அளித்தார். பொலிஸார் வீட்டுக்கு சென்றபோது, செண்பகத்தின் உடல், ஒரு பிளாஸ்டிக் டிரம்மில் அழுகிய நிலையில் இருந்தது. உடலை மீட்ட பொலிஸார், பிரேத பரிசோதனை செய்ய, இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதுடன் சுரேஷிடம் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

புதுடெல்லி

# தாஜ்மகால் அறைகளில் இரகசியம் எதுவுமில்லை

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஊடகப் பிரிவு பொறுப்பாளர் ரஜ்னீஷ் சிங், தாஜ்மகால் வளாகத்தில் மூடப்பட்டு கிடக்கும் 20 அறைகளை திறக்க உத்தரவிட கோரி, அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மே மாதம் நான்காம் திகதி மனு தாக்கல் செய்தார்.

இந்து கடவுள்களின் சிலை இருக்க வாய்ப்பு உள்ளதால் அந்த அறைகளை திறந்து சோதனை செய்ய உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.



இந்த மனு 12 ஆம் திகதி, நீதிபதிகள் டி.கே. உபாத்யாய், சுபாஷ் வித்யார்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்தனர்.

புதுடெல்லி

## காஷ்மீர் தொகுதி மறுவரையறை:
# இஸ்லாமிய அமைப்புக்கு இந்தியா கடும் கண்டனம்

ஜம்மு காஷ்மீர் தொகுதி மறுவரையறை தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துத் தெரிவித்த இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கு (ஐ.ஓ.சி) இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



57 இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பான ஐ.ஓ.சியின் ஆண்டுக்கூட்டம் சமீபத்தில் பாகிஸ்தானில் நடந்தது. இதைத் தொடர்ந்து, ஐ.ஓ.சியின் 'டிவிட்டர்' பதிவில், காஷ்மீர் தொகுதி மறுவரையறை குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவிக்கப்பட்டது. அதில், 'இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்த ஜம்மு காஷ்மீரின் தேர்தல் எல்லைகளை மீண்டும் வரையறுக்க முயற்சிப்பது, பிரதேசத்தின் மக்கள்தொகை கட்டமைப்பை மாற்றுவது என்பன காஷ்மீர் மக்களின் உரிமைகளை மீறுவதாகும். இது குறித்து ஐ.ஓ.சி ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி , "இந்தியாவின் உள்விவகாரங்கள் குறித்து, ஐ.ஓ.சி மீண்டும் தேவையற்ற கருத்துகளை தெரிவித்துள்ளது கண்டிக்கத்தக்கது. இந்தியாவின் ஒருங்கிணைந்த, பிரிக்க முடியாத பகுதியாக ஜம்மு காஷ்மீர் எப்போதும் இருக்கும். ஐ.ஓ.சி கூறியதை இந்திய அரசு திட்டவட்டமாக நிராகரிக்கிறது. இந்தியாவுக்கு எதிராக, ஒருநாட்டின் உத்தரவின் பேரில் ஐ.ஓ.சி செயற்படுவதை தவிர்க்க வேண்டும்" என்றார்.



லக்னோ

# திருடிய சிலைகளை திருப்பிக் கொடுத்த கனவு

உத்தர பிரதேசத்தில் கோவில் ஒன்றில் பல கோடி மதிப்பிலான சுவாமி சிலைகளைத் திருடியவர்கள், அடுத்த சில நாள்களில் பயங்கரமான கனவுகள் வருவதாக கடிதம் எழுதிவைத்துவிட்டு, திருடிய சிலைகளை கோவில் அர்ச்சகரின் வீட்டின்முன் வைத்து தப்பியுள்ளனர்.

சித்ரகூட மாவட்டத்தின் தருஹா என்னும் கிராமத்தில் 300 ஆண்டுகள் பழைமையான பாலாஜி கோவில் உள்ளது. இங்கு மே மாதம் ஒன்பதாம் திகதி இரவு, பல கோடி மதிப்பிலான 16 சுவாமி சிலைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து திருடர்களைத் தேடி வந்தனர். இந்நிலையில், திருட்டுப்போன ஆறே நாள்களில் 16 சிலைகளில் 14 சிலைகளை அந்தக் கோவில் அர்ச்சகரின் வீட்டுக்கு அருகே இரவு நேரத்தில் திருடர்கள் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். கூடவே ஒரு கடிதத்தையும் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

பெங்களூர்

# கான்ஸ்டபிள் மீது 5 ஆவது மனைவி புகார்

பெங்களூரில் சிறப்பு பிரிவில் பொலிஸ் கான்டபிளாகப் பணியாற்றி வரும் பி.எம் பாபுக்கு எதிராக அவருடைய மனைவி, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

'எனது கணவர் பி.எம்பாபுவுக்கு ஏற்கெனவே 4 முறை திருமணம் நடந்துள்ளது. ஆனால், அந்த நான்கு திருமணங்களையும் அவர் மறைத்து, ஐந்தாவதாக என்னைத் திருமணம் செய்துகொண்டார். இதுகுறித்து, பற்றி எனக்கு தெரிந்ததும் நான் அவரிடம் கேட்டேன். அதுமுதல் எனக்கும், எனது மகளுக்கும் பி.எம்.பாபு மனரீதியாக தொல்லை கொடுத்து வருகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.









# பசுமை இயக்கத்தால் கஞ்சி வழங்கல்

வி.நிதர்ஷன்





தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் நேற்று (17) நடைபெற்றது.
யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது.
இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு, அவ்வமைப்பின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மற்றும் சக உறுப்பினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது.
அத்துடன், வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.








# நினைவேந்தல்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மூதூர் கிளையின் ஏற்பாட்டில், மூதூர் – பட்டித்திடல் கற்பக விநாயகர் கோவிலில் நேற்று (17) நடைபெற்றது. (தீஷான் அஹமட்)
















# வவுனியாவில்...

இன விடுதலையை வேண்டி, 'பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால்' வரையான மக்கள் பேரணி, பொத்துவிலில் இருந்து கடந்த 15ஆம் திகதி ஆரம்பமானது. இந்தப் பேரணி, வவுனியாவை நேற்று (17) வந்தடைந்தது.
பேரணி, பழைய பஸ் நிலையத்துக்குச் சென்றதை அடுத்து, அங்கு வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தயாரிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்த மக்கள் பேரணி, மாங்குளம் ஊடாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலுக்கு இன்று (18) செல்லவுள்ளது. (க. அகரன்)









ஈராக்

ஈராக்கை 8ஆவது முறையாக

# தாக்கிய புழுதிப் புயல்

ஈராக்கில் தொடர்ச்சியாக வீசி வரும் புழுதிப் புயல் காரணமாக, பாக்தாத் உட்பட பல்வேறு நகரங்கள் செந்நிற போர்வை கொண்டு போர்த்தியது போல் காட்சி அளிக்கின்றன.

மேலும் 8 ஆவது முறையாக வீசிய இப் புழுதிப் புயல் காரணமாக, மக்கள் சுவாசக் கோளாறு, சருமப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதன்காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாகவும் இந்நிலையில் பொது மக்களின் நலன் கருதி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை மூடப்பட்டுள்ளதோடு, விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சோமாலியா

## சோமாலியாவுக்குப் படைகளை அனுப்பும் அமெரிக்கா



சோமாலியாவில் அல் கொய்தாவின் ஆதரவு அமைப்பான 'அல்-அஷபாப்' பயங்கரவாத அமைப்பு இயங்கி வருகிறது.

இவ்வமைப்பை ஒழிக்கக்கூடிய நடவடிக்கையில் சோமாலிய அரசாங்கத்துடன் சேர்ந்து அமெரிக்கா செயற்பட்டது.

இதற்கென சோமாலியாவில் 100க்கும் மேற்பட்ட அமெரிக்கப் படை வீரர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர்.

இதனிடையே, கடந்த வருடம் ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் ட்ரம்ப், சோமாலியாவிலிருந்து அமெரிக்க படைகள் முழுவதையும் திரும்பப்பெற உத்தரவு பிறப்பித்தார்.

சோமாலியாவுக்கு மீண்டும் படைகளை அனுப்புவதற்கு, தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மீளவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அந்தவகையில், முதற்கட்டமாக 500 வீரர்கள் சோமாலியாவுக்கு அனுப்பப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரான்ஸ்

## கற்பனை உலகின் பிரமாண்டத் திருவிழா

பிரான்ஸில் உள்ள லீலி நகரத்தில் கற்பனை உலகத்தை மையமாக வைத்து நடைபெற்ற பிரம்மாண்ட உட்டோப்பியா (Utopia) திருவிழா பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

இத்திருவிழாவில் பறக்கும் மீன் பொம்மை, குதிரை, முயல் பொம்மைகள், மனித உருவத்தை போல் வடிவமைக்கப்பட்டிருந்த இராட்சத மரப்பாச்சி பொம்மை, நோய்வாய்ப்பட்ட டோடோ பறவை, கடல்குதிரை, சிமெரா விலங்கு பொம்மைகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டன.

அத்துடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இத்திருவிழாவைக் காண, ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வருகை தந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ரஷ்யா

## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட 'மெக்டொனால்ட்ஸ்'

30ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யாவில் கிளைகளை நிறுவி வருவாய் ஈட்டி வந்த 'மெக்டொனால்ட்ஸ்' நிறுவனம், அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக உக்ரேன் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையயில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ரஷ்யாவில் உள்ள தனது 850 கிளைகளை முழுமையாக மூட முடிவு செய்துள்ளதாக 'மெக்டொனால்ட்ஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் தற்போது அனைத்து கிளைகளையும் உள்ளூர் முதலிட்டாளர்களிடம் விற்க முயன்று வருவதாகவும், நிறுவனம் கைமாறும் வரை 62,000க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் எனவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.



அண்டார்டிகா

## 4 மாதங்களுக்கு சூரிய உதயம் இல்லை

"அண்டார்டிகாவில் நான்கு மாதங்களுக்கு சூரிய உதயம் ஏற்படாது" எனவும், கடந்த 13 ஆம் திகதி சூரியன் மறைந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அண்டார்டிகாவில் இரவு பகல் மாறுவதே சுமார் 6 மாதங்களுக்கு ஒருமுறை தான் நிகழும் எனவும், பூமி தன் அச்சில் 23.5 பாகை சாய்ந்து இருப்பதே இதற்குக் காரணம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


அமெரிக்கா

# நேட்டோவில் இணையும் ஸ்வீடன்?

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் இணையவுள்ளதாக பின்லாந்து அண்மையில் அறிவித்திருந்த நிலையில், ஸ்வீடனும் தற்போது நேட்டோவில் இணையவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யா, 2022 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில் ரஷ்யாவின் அண்டை நாடுகளான ஸ்வீடனும் பின்லாந்தும், நேட்டோ அமைப்பில் சேருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில், நேட்டோ அமைப்பில் இணைவது தொடர்பாக, ஸ்வீடன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

# பால்மாவுக்குத் தட்டுப்பாடு; தாய்ப்பாலை விற்கும் தாய்


அமெரிக்காவில் அண்மைக்காலமாக பால் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குறிப்பாக குழந்தைகளுக்கான பால்மாவைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பல குடும்பங்கள் திணறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல பால் உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்தியை நிறுத்தியமையே இத் தட்டுப்பாட்டுக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஜூடாவில் வசிக்கும் அலிசா சிட்டி என்ற பெண் தன்னுடைய தாய்ப்பாலை விற்று, பல குழந்தைகளுக்கு பசியாற்றி வருகிறார்.

மேலும் இவர், தனது தாய்ப்பாலை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவை ஏற்படும் போது விற்பனை செய்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# பலமான நிலையில் பங்களாதேஷ்



இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் பலமான நிலையில் பங்களாதேஷ் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சட்டோகிராமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளை விக்கெட் இழப்பின்றி தமது முதலாவது இனிங்ஸில் 76 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ், தமிம் இக்பால் மூலம் தொடர்ந்து ஓட்டங்களைக் குவித்தது.

இந்நிலையில், அசித பெர்ணாண்டோவிடம் 58 ஓட்டங்களுடன் மஹ்முடுல் ஹஸன் ஜோய் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, அணித்தலைவர் மொமினுல் ஹக் ஆகியோர் வந்த வேகத்தில் கசுன் ராஜிதவிடம் வீழ்ந்தனர். தொடர்ந்து தமிம் இக்பாலும் 133 ஓட்டங்களுடன் உபாதை காரணமாக களத்தை விட்டு வெளியேறினார்.

அந்தவகையில் பங்களாதேஷ் தடுமாறியபோதும், முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸின் இணைப்பாட்டத்தால் மூன்றாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்தது தமது முதலாவது இனிங்ஸில் 318 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், ரஹீம் 53, தாஸ் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 397/10 (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் 199, தினேஷ் சந்திமால் 66, குசல் மெண்டிஸ் 54, ஒஷாத பெர்ணாண்டோ 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: நயீம் ஹஸன் 6/105, ஷகிப் அல் ஹஸன் 3/60, தஜியுல் இஸ்லாம் 1/107)

பங்களாதேஷ்: 318/3 (துடுப்பாட்டம்: தமிம் இக்பால் 133, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 58, லிட்டன் தாஸ் ஆ.இ 54, முஷ்பிக்கூர் ரஹீம் ஆ.இ 53 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 2/17, அசித பெர்ணாண்டோ 1/55)

அதிர்ச்சிப் பிரதியீடாக

## விஷ்வவைப் பிரதியிட்ட ராஜித



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த முதலாவது டெஸ்டில் அதிர்ச்சிப் பிரதியீடொன்றாக இலங்கையின் வேகப்பந்துவீச்சாளர் விஷ்வ பெர்ணாண்டோவை இன்னொரு வேகப்பந்துவீச்சாளரான கசுன் ராஜித பிரதியிட்டுள்ளார்.

இந்நிலையில், எம்.ஆர்.ஐ ஒன்றுக்காக வைத்தியசாலைக்கு விஷ்வா எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக இலங்கை அணி உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தின இரண்டாம் நாள் ஆட்டத்தின்போது விஷ்வவின் தலைக்கவசத்தை ஷொரிஃபுல் இஸ்லாம் வீசிய பந்து தாக்கியதுடன், உடனடியாக அவர் துடுப்பெடுத்தாடியபோதும் பின்னர் அவர் வெளியே சென்று இறுதி விக்கெட்டாகவே மீண்டும் நுழைந்திருந்தார்.

பின்னர் நேற்று முன்தினமும், நேற்றுக் காலையும் பந்துவீசியபோதும் அவர் களத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

மாகாண அமைச்சுகள், திணைக்களங்களுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான கிழக்கு மாகாண கல்வி அமைச்சு

பைஷல் இஸ்மாயில்



தமிழ், சிங்கள-சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கிழக்கு மாகாண அமைச்சுகள், திணைக்களங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அணி, ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இத்தொடரில் அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர் (ஓவருக்கு 04 பந்துகள்) 12 அணிகள் பங்குபற்றி இறுதிப் போட்டியில் சுகாதார அமைச்சு அணியை வென்றே கல்வி அமைச்சு அணி சம்பியனாகியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சுகாதார அமைச்சு அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதற்கமைய துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

45 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி கல்வி அமைச்சு அணி துடுப்பெடுத்தாடி 10 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

ஐ.பி.எல்:

## பஞ்சாப்பை வென்ற டெல்லி



இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட டெல்லி, ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட இடைவெளிகளில் லியாம் லிவிங்ஸ்டோன் (3), அர்ஷ்டீப் சிங் (3), ககிஸோ றபாடாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், மிற்செல் மார்ஷ் 63 (48), ஃஸ்ப்ராஸ் கான் 32 (16), லலித் யாதவ் 24 (21) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு, 160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், அன்றிச் நொர்ட்ஜே, ஷர்துல் தாக்கூர் (4), அக்ஸர் பட்டேல் (2), குல்டீப் யாதவ்விடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களையே பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜிதேஷ் ஷர்மா 44 (34), ஜொனி பெயார்ஸ்டோ 28 (15) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஷர்துல் தாக்கூர் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸும், லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும் மோதவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 18 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.